<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண்.389/2019**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
<u>வாக்குமூலம் – வா.சா.2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துச்சாமி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 23.01.2025 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு ஜனவரி 23ம் நாள் சாட்சியம்.

---

<u>**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. நான் 2ம் வகுப்பு படித்துள்ளேன். எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள எனது பூமியை எந்த ஆண்டு விற்றேன் என்றால், 2000ம் வருடத்தில் விற்றேன். வாதி பூமியின் காலை எண் எனக்கு தெரியாது. நான் விற்ற பூமியின் காலை எண் தெரியாது. 2000ம் வருடம் விற்ற பிறக தாவா சொத்திற்கு நான் செல்லவில்லை என்றால், நான் அறுவடை காலங்களில் புல் வாங்குவதற்கு அங்கு செல்வேன். அறுவடை காலங்களில் வாய்க்காலில் தண்ணீர் செல்லாது என்றால், ஆமாம்.

2. பிரதிவாதிகளை எனக்கு தெரியும். பிரதிவாதிகள், வாதி எப்போது தங்களது சொத்துக்களை கிரையம் பெற்றனர் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி பெற்ற கிரைய ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதிக்கு கிரையம் கொடுத்த முன் பாத்தியஸ்தர்களுக்கு என்ன உரிமை உள்ளது என்ற

விவரம் எனக்கு தெரியாது. நான் விற்ற பூமி எனது பெயரில் இருந்த ஆவணமோ, நான் விற்பனை செய்த ஆவணமோ தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

3. நான் சொல்வது போல் எனக்கு பாத்தியப்பட்ட பூமி எதுவும் அங்கு பூமியே இல்லை, அதனால் தான் நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. வாதி, மற்றும் 1ம் பிரதிவாதி பூமிக்கு தென்புறமாக 5 அடி அகலத்தில் அரசு கவர் வாய்க்கால் செல்கிறது என்றால்,ஆமாம். மேற்படி வாய்க்கால் வழியாக தான் அனைவருக்கும் கவர் பாத்தியம் உள்ளது என்றால், ஆமாம். மேற்படி கவர் வாய்க்கால் மேற்கிருந்து கிழக்காக அமராவதி ஆறு வரை சென்று ஆற்றில் கலக்கிறது.

4. மேற்படி கவர் வாய்க்காலை ஒட்டி 10 பேருக்கு பூமி இருக்கும். மேற்படி அரசு கவர் வாய்க்காலிலிருந்து வடபுறமாக உள்ள அனைத்து பூமிகளுக்கும் தண்ணீர் பாய்கிறது என்றால், சரிதான். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். வாதி எனக்கு சொன்னார். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியமளிக்க அழைப்பாணை வரவில்லை. வாதி கிரையம் பெற்ற பத்திரம் செல்லாதும், எனது அக்கா சுவர்ணாத்தாள் வாங்கிய கிரையம் ஆவணமும் செல்லாது அது மோசடி கிரைய ஆவணம் என்றால், சரியல்ல.

5. அரசு கவர் வாய்க்காலிலிருந்து தென்புறமாக எத்தனை பூமிகளுக்கு தண்ணீர் பாய்கிறது என்றால், தென்புற பூமிகளுக்கு தண்ணீர் பாய்வதில்லை, மேடாக உள்ளது. மேற்படி அரசு கவர் வாய்க்காலிலிருந்து வடபுறமாக புது வீட்டுக்கரார் மற்றும் சிவகாமி ஆகியோர் பூமி உள்ளது என்றால், ஆமாம், அவர்கள் பூமிக்கு தண்ணீர் பாய்கிறது. மேற்படி கரை வழியில் ஒரு போகம் தான் விளைகிறது. அறுவடை காலங்களில் ஒருவர்

பூமியில் அறுவடை செய்தால் தான் மற்றொருவர் பூமிக்கு வண்டி வாகனங்கள் எடுத்த செல்ல இயலும் என்றால், ஆமாம், ஒருவருக்கொருவர் அனுசரித்து தான் விவசாயம் செய்து கொள்ள வேண்டும்.

6. 1, 2 பிரதிவாதிகளுக்கு அரசு கவர் வாய்க்காலுக்கு வடபுறமாகவும், தென்புறமாகவும் பூமி உள்ளது, வாதிக்கு வடபுறம் மட்டும் பூமி உள்ளது, அறுவடை காலத்தில் கவர் வாய்க்காலை தாண்டி வாகனம் ஓட்டியதால் தான் இருவருக்கும் பிரச்சனை என்றால், தெரியாது. அக்டோபர் மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரை தான் அந்த கரை வழியில் விவசாயம் செய்து அறுவடை செய்யப்பட்டும், மற்ற நாட்களில் தண்ணீர் இருக்காது என்றால், ஆமாம். தண்ணீர் இல்லாத காலங்களில் கிணற்று பாசனம் மூலம் விவசாயம் செய்வர்.

7. வாதி பூமியில் கிணறு உள்ளது, 1, 2 பிரதிவாதிகள் பூமியில் கிணறு உள்ளதா என்றால், எனக்கு தெரியாது. வாதி, பிரதிவாதிகள் பூமிக்கு வடபுறமாக மாய்க்கான்கிளை என்ற அரசு வாய்க்கால் செல்கிறது. மேற்படி அரசுவாய்க்காலிலிருந்து உபயவாதிகளின் நிலத்திற்கு தண்ணீர் பாய்ந்து உபரி நீர் மாய்க்கான்கிளை வாய்க்காலுக்கு தான் செல்லும் என்றால், ஆமாம். எனது பூமி அந்த கரை வழியில் தில்லாபுரி அம்மன் கோவில் அருகே இருந்தது. எனது பூமிக்கும் வழக்கு சொத்திற்கும் 1 கி.மீ தொலைவு இருக்கும்.

8. அரசு கவர் வாய்க்காலில் தண்ணீர் பாய்ச்சு வதை யாரும் தடுக்க முடியாது என்றால், ஆமாம். அரசு கவர் வாய்க்கால் வாதி பூமிக்கு தண்ணீர் பாய்கிறது. கடைசியாக தாவா பூமிகளை சென்ற வாரம் பார்த்தேன். வாதி வரச்சொன்னார் சென்று பார்த்தேன். எனது

ஊர் செட்டியார்புதூர் ஆகும், அது பகவான் கோவில் அருகே உள்ளது. வாதி இடத்திற்கும் செட்டியார் புதூருக்கும் 4, 5 கி.மீ தொலைவு இருக்கும். வாதி எனக்கு நண்பர் என்பதன் அடிப்படையில் வாதிக்கு ஆதரவாகவும், பிரதிவாதிக்கு எதிராகவும் சாட்சியமளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் பூமியை விற்றதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை, நான் அங்கு அடிக்கடி சென்று வருவதற்கான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை, அதனால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால், சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

MATHIVATHANI VANANGAMUDI

Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2025.01.23 17:53:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.